## இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு

## ஊடக அறிக்கை

# இலங்கை-இந்திய கூட்டப்பியாசத்திற்காக - 2018 (SLINEX-2018) இந்திய கடற்படைக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் வருகின்றன

இலங்கை-இந்தியக் கடற்படைகளின் கூட்டப்பியாசம் (SLINEX-2018) திருகோணமலையில் 2018, செப்டெம்பர் 7 ஆம் திகதியிலிருந்து 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கொரு முறை, முன்னர், நடைபெற்ற இந்த அப்பியாசம் இந்த வருடத்திலிருந்து ஒரு வருடாந்த நிகழ்வாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது, இரண்டு நாடுகளுக்குமிடையில் கடற் பரப்பிலான ஒத்துழைப்பு மற்றும் இரண்டு கடற் படைகளிற்கிடையில் பரஸ்பர நம்பிக்கை, இடைச் செயற்படும் தன்மை என்பவற்றை மேம்படுத்து வதற்கான



விருப்பத்தைக் குறிக்கின்றது. இந்தக் கூட்டப்பியாசமானது இரு கடற்படைகளுக்கு மிடையில் நடைபெற்று வரும் இடைச்செயற் பாடுகள் மற்றும் இரண்டு நாடுகளிற்கிடையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கிரமமான கப்பல் வருகைகளின் ஒரு தொடர்ச்சியாகவும் உள்ளது.

இலங்கை-இந்திய கூட்டப்பியாசம் 2017 கடந்த வருடம் செப்டெம்பரில் விசாகப்பட்டனத்தில் நடைபெற்றதுடன் இலங்கைக் கடற்படையிலிருந்து இரண்டு போர்க்கப்பல்கள் அதில் பங்குபற்றின. பயிற்சியின் பங்குபற்றுதலின் அளவு இந்த வருடம், இந்தியத் தரப்பிலிருந்து மூன்று கப்பல்கள், இரண்டு கடற்படை ரோந்து விமானங்கள் மற்றும் ஒரு உலங்கு வானூர்தி என்பவற்றுடன் அதிகரித்துள்ளது. மேலும், முதல் தடவையாக இந்தப் பயிற்சியில் இலங்கை விமானப்படையினரும் இணைந்து கொள்வார். துறை முகம் மற்றும் கடல் என்ற பெயரில், இரண்டு கட்டங்களாக நடாத்தப்படும் இந்த ஆறு நாள் கூட்டப்பியாசம், தொழில்சார் விரிவுரைகள், நிபுணத்துவ பரிமாற்றங்கள், உலங்கு வானூர்தி மற்றும் கடல் ரோந்து விமானச் செய்றபாடுகள், ஆயுத அப்பியாசப் பயிற்சி, தேடுதல் மற்றும் மீட்டல், கடலாண்மை மற்றும் கடலில் படை நடவடிக்கைகள் என்பவற்றை நடத்துவதுடன் சம்பந்தப்பட்டிருக்கும். அப்பியாசத்தின் ஒரு குறிப்பிடக்கூடிய நடவடிக்கையாக சீனன் குடாவிலிருந்து இந்திய கடற்படையினால் செலுத்தப்படும் டோனியர் விமானம், இலங்கைக் கடற்படை மற்றும் இலங்கை விமானப்படை என்பவற்றால் மேற்கொள்ளப்படும் கடல் ரோந்து பயிற்சிகள் என்பவை இருப்பதுடன் பயனறுதியான EEZ கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை நடத்துவதில் படையினருக்கு பயிற்சி அளிப்பதையும் உள்ளடக்கியிருக்கும்.



இவ்வப்பியாசம் விளையாட்டு போட்டிகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளையும் கொண்டிருப்பதுடன் அவை இரு கடற்படையினரும் ஒருவரிடமிருந்து மற்றுமொருவர் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்கி, அவர்கள் தங்களுடன் எடுத்துச் செல்வதற்கு நட்பு மற்றும் கூட்டிணைவின் தனிப்பட்ட பிணைப்புகளைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் பகிர்ந்து கொள்ளும் விழுமியங்களையும் மீள் வலியுறுத்துகிறது.